# திருக்குறளும் மேலாண்மையும்

**OPEN ACCESS**

Volume: 13

Special Issue: 5

Month: March

Year: 2026

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

Citation:
***காளியப்பன், சா.*** *திருக்குறளும் மேலாண்மையும்.* ***Shanlax International Journal of Arts Science and Humanities***, Vol. 13, no. S1, 2026,

pp. 106-11.

*Corresponding Author:
santahkaliappan@gmail.com

DOI:
https://doi.org/10.34293/sijash.v13iS5-Mar.11100

***சாந்தா காளியப்பன்***
சித்தியவான், மலேசியா

**ஆய்வுசுருக்கம்**

*தமிழ் இலக்கியத்தில் தனி சிறப்பு பெற்று பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட நூல் திருக்குறள். இது மனித வாழ்க்கைக்கு வழிகாட்டி. தனிமனிதன், தலைவன், அரசன், குடிமகன், தொழிலாளி, முதலாளி என்று எல்லாருக்கும் தெவையான கருத்துகளைத் தந்து வழிநடத்தும் வல்லமை திருக்குறளுக்குண்டு. இந்த ஆய்வு குறள் காட்டும் மேலாண்மை கருத்துகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வு நூலியல் ஆய்வை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.திருக்குறள்,திருக்குறள்விளக்கநூல்கள்பயன்படுத்தப்படும். திருக்குறளில் உள்ள பொருட்பால் அதிகரங்களில் காணப்படும் மேலாண்மை குறட்பாக்களை அடையாளம் கண்டு சூழலுக்கு ஏற்பப் பகுப்பாய்வு செய்தல். இன்றைய சூழலுக்குத் திருவள்ளுவரின் மேலாண்மை கருத்துகள் எவ்வாறு பொருந்துகின்றன என்பதை சான்றுகளுடன் விளக்குதல். பல ஆயிரம் ஆண்டுகள்பழைமையானதிருக்குறளின்மேலாண்மைகருத்துகள் இன்றும்மானிட வாழ்வை மேம்படுத்தும் என்பதை அறிந்து,திருக்குறளைத் துணைக் கொள்வோம்.*

***திறவுச்சொற்கள்:*** *இலக்கியம், விளக்க நூல்கள், கருத்துகள், அதிகரங்கள், மானிட வாழ்வு.*

**முன்னுரை**

தமிழ் இலக்கியத்தில் தனி சிறப்பு பெற்று, பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட நூல் திருக்குறள். சற்றேறத்தாழ 2050 ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் எனும் பேராசானால் இயற்றப்பட்ட இந்நூலில் 1330 குறட்பாக்கள் 133 அதிகாரங்களில் தலா 10 குறட்பாக்களில் அமைக்கப் பட்டுள்ளது. அறம், பொருள், இன்பம் எனும் மூப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதைத் தமிழ்க்கூறு நல்லுலகத்தார் அறிவர். மனித வாழ்வு மேம்பட வள்ளுவர் யாத்தளித்த மிகப்பெரிய அருங்கொடை திருக்குறள். இது மதம். இனம். மொழி. நாடு கடந்தும் நடைபழகுவதால் உலகப் பொதுமறை எனும் பெயர் பெற்றது. திருக்குறளில் மேலாண்மை கருத்துகளை அடையாளம் காண்பதே இந்த ஆய்வின் நோக்கம் என்பதால் முதலில் மேலாண்மை என்றால் என்ன என்ற தெளிவைப் பெறுவது சிறப்பு. ஒரு குறிக்கோளை நோக்கி பலரை உழைக்கும் ஆற்றல் உடையவர்களாக்குவதுதான் மேலாண்மை என்கிறார் “பீட்டர் டிரக்கர்” (Peter Ferdinand Drucker, 1909-2005). “கூன்ட்ஸ்சும் ஓ டோனல்சும் தங்களின் Principles of Management: An Analysis of Managerial Functions” என்ற நூலில் மேலாண்மை என்பது ஒரே குழுவில் பணியாற்றும் நபர்கள், குழுவின் இலக்குகளைத் திறமையாகவும் பயனுள்ளதாகவும் அடையக்கூடியச்

சூழலை ஒரு நிறுவனத்தில் உருவாக்குவதும், அதைப் பராமரிப்பதுமான செயல் எனவும், இது முறையாக அமைக்கப்பட்ட குழுவில் உள்ள மனிதர்களைப் பயன்படுத்தி, அவர்களுடன் இணைந்து வேலை செய்யும் கலை எனவும் குறிப்பிடுகின்றனர். மேலாண்மையில் அடங்கிய பணிகள் யாவை என்பதையும் இவர்கள் தெளிவுபடுத்தி உள்ளனர். திட்டமிடுதல் (Planning), கட்டமைத்தல் (Organicing), பணியமர்த்துதல் (Staffing), நெறிப்படுத்துதல் (Directing), கட்டுப்படுத்துதல் (Controling) இவை ஐந்தும் மேலாண்மைக்கான கூறுகள் என்று சொல்கின்றனர். F.W Taylor என்பவர், மேலாண்மை என்பது செய்ய வேண்டியதைத் தெளிவாக அறிந்து, சிறந்த முறையில் குறைந்த செலவில் செய்யும் கலை என்கிறார். இந்த நவீன உலகில் முக்கியமான திறனாக மேலாண்மை கருதப்படுகிறது. மேலாண்மை தொடர்பான கல்வியும் தொழில் துறையும் வளந்துள்ளதை மறுக்க முடியாது.

**ஆய்வின் நோக்கம்**

திருக்குறள் வாழ்வியல் அறங்களைப் பேசும் நூல். பொருட்பால் வாழ்க்கைத் தேவைகளை எடுத்துக் கூறுகிறது. புறத்தேவைகளும் அகத்தேவைகளும் வழியுறுத்தப்படும் இப்பகுதி ஏழு இயல்களும் எழுநூறு குறட்பாக்களும் கொண்டது. அரசியல், அமைச்சியல் கூழியல், அரணியல், படையியல், நட்பியல், குடியியல் என்னும் ஏழு இயல்களில் திருக்குறள் காட்டும் மேலாண்மை கருத்துகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது இந்த ஆய்வு.

**ஆய்வின் முறை**

இவ்வாய்வு நூலியல் ஆய்வை மையமாகக்கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. திருக்குறள், திருக்குறள் விளக்க நூல்கள், திருக்குறள் ஆய்வு கட்டுரைகள், மேலாண்மை தொடர்பான ஆய்வுகள் ஆகியவை இந்த ஆய்வுக்குத் துணையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வு அணுகுமுறை**

திருக்குறளில் உள்ள பொருட்பால் அதிகரங்களில் காணப்படும் மேலாண்மை குறட்பாக்களை அடையாளம் காணுதல். அவற்றைச் சூழலுக்கு ஏற்பப் பகுப்பாய்வு செய்தல். இப்பகுப்பாய்வு தலைமைத்துவம், திட்டமிடுதல், கட்டமைத்தல், பணியமர்த்துதல், நெறிப்படுத்துதல், கட்டுப்படுத்துதல், நேர மேலாண்மை போன்ற கூறுகளில் செய்யப்படுகிறது.

**ஆய்வின் கண்டுபிடிப்பு**

**தலைமைத்துவம்**

நாடும் வீடும் நலம் பெறுவதற்குச் சிறந்த தலைமைத்துவமே அடித்தளமாக அமைகின்றது. நாடு சிறந்து விளங்குவதற்கு அந்நாட்டை ஆட்சி செய்கின்ற அரசு சிறந்த அரசாக இருக்க வேண்டும். அந்த அரசு அறிவுடைய அரசாகவும் தொலைநோக்குப் பார்வையைக் கொண்ட அரசாகவும் இருக்க வேண்டும். இத்தகைய பண்புகளை கொண்ட நாடு உலக அளவில் வளர்ந்து நிற்பதை இன்றும் நம்மால் காண முடிகின்றது.

நாட்டை ஆளுகின்ற அரசன் ஆற்றல் மிக்கவனாக இருப்பது நாட்டுக்கும் குடிகளுக்கும் நன்மை சேர்க்கும். நல்ல மதி வளம் கொண்ட அமைச்சர், எப்போதும் விழிப்புடன் இருக்கும் படைகள், உணவுப் பஞ்சம் இல்லாமை, விசுவாசம் மிகுந்த குடிமக்கள் இவை யாவையும் பெற்ற அரசனே சிறந்தவன் என்கிறது குறள் 381.

### திட்டமிடல்

எடுத்துக்கொண்ட செயல்பாடு வெற்றி அடைய வேண்டுமென்றால் சரியான திட்டமிடல் அவசியமாகிறது. திட்டமிடலில் தோற்பவர்கள் தோல்விக்குத் திட்டமிடுபவர்கள் என்பது "பெஞ்சமின் பிராங்கிளின் (Benjamin Franklin; 1786) என்ற 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிஞரின் கூற்றாகும்.

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு (467)**

என்ற குறளின் சாரம், திட்டமிடலின் முதல் அடியை எடுத்து வைக்க ஊக்கியாக அமைகிறது. ஒரு செயலைண் செய்வதற்கு முன் அச்செயலைணீ பற்றி நன்கு ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். எடுக்கின்ற முடிவின் இலாப நட்டங்களைக் கணக்கிடல் அவசியமாகிறது. "முதலில் தொடங்குவோம் மற்றவற்றைப் பின்னர் யோசிக்கலாம்", என்று தொடங்கப்படும் செயல் முழு வெற்றியைத் தராது. அவ்வாறு யோசிப்பதே தவறு என்கிறது குறள் 467. தெளிவில்லாமல் செய்யத் தொடங்கும் தொழில் பலரின் நகைப்புக்கு இடமளிக்கும்(குறள் 464). தெளிவாகத் திட்டமிடாதச் செயலைப் பலர் முயற்சி செய்துக் காப்பாற்ற முயன்றாலும் அத்திட்டம் தோல்வியில்தான் முடியும் என்பதை 468வது குறளில் வள்ளுவர் தெளிவாகக் கூறுகின்றார். இவ்வாறான தெளிவின்மை போட்டியாளருக்கு வெற்றியை ஈட்டித் தந்து, நம்மை மட்டுப்படுத்தும் என்கிறது குறள் 465. ஒரு செயலை திட்டமிடுவதற்கும் ஆழ்ந்த அறிவு, துறை சார்ந்த அனுபவம், ஆற்றல், பயிற்சி ஆகியவை மிக முக்கியம். இவை அனைத்தும் ஒருவரிடத்தில் இருக்க வேண்டியது அவசியம் இல்லை. ஆனால், இவாற்றால் மிக்கவரோடு கூட்டு சேர்ந்து இயங்குவது தனித்தன்மை அவசியம் என்பதை தெரிந்து இனத்தொடு (குறள் 462) என்று தொடங்கும் நமக்குத் தெளிவாக்குகிறது. திட்டமிட்டு செயல்படுவதற்குத் தேவையான பொருள், காலம், இடம், கருவி,வினை ஆகியவையும் செயல் வெற்றியத் தீர்மானிக்கும் என்பதைப் "பொருள்கருவி காலம் வினையிடனொடு" என்னும் குறள் 675 குறிப்பிடுகிறது.

### பொருள்

இங்கு பொருள் என்பது பணத்தையும் மூலப் பொருளையும் குறிக்கும். பொருளைப் பற்றி சிந்தியாமல் திட்டமிடல் நடக்காது. போதுமான பணம் இருந்தால்தான் ஒரு நிறுவனம் சிறப்பாக இயங்க முடியும். ஊழியர்களுக்குத் தக்க சமயத்தில் ஊதியம் வழங்க முடியும். அதேப்போல் மூலப்பொருள் இல்லாமலும் தொழில் இயங்காது. இவ்விரண்டும் சமச்சீராக இருந்தால் திட்டமிடல் வெற்றியடையும். தெரிந்து செயல்வகை அதிகாரத்தில் வரும் "அழிவதூஉம் ஆவதூஉம்" (குறள் 461) என்னும் குறள் இதனை விளக்குகிறது.

### காலம்

காலம் அறிந்து திட்டமிட்டு வினையாற்றுவது நல்ல பலன் தரும் என்பது உறுதி. சான்றாக பருவமறிந்து பயிர் செய்யும் விவசாயி, நல்ல விளைச்சலை ஈட்ட முடியும். கொட்டும் மழைக் காலம் உப்பு விற்கப் போனேன்; காற்றடிக்கும் நேரம் மாவு விற்கப் போனேன் எனும் கவிஞர் வாலியின் பாடல் வரிகளுக்கு ஏற்றாற்போல் செயல்பட்டால் நட்டப்படுவது உறுதி. இதனையே திருவள்ளுவர் "பருவத்தோடு ஒட்ட ஒழுகல்" (குறள் 482) என்ற குறளில் குறிப்பிட்டுள்ளார். பெரிய பகை நாட்டை வென்றிட நினைக்கும் அரசன் ஏற்ற காலத்துக்குக் காத்திருப்பதைபோல, எடுத்துக்கொண்ட செயல் வெற்றியடைய வேண்டுமானால் மனம் தளராமல் ஏற்ற காலத்திற்குக் காத்திருந்து செயலாற்ற வேண்டும் எனும் தாரக மந்திரத்தை நமக்குத் தூவிச் செல்கிறது "காலம் கருதி இருப்பர்" எனும் குறள். (குறள் 485)

### இடம்

திருக்குறளில் காணப்படும் மேலாண்மை கருத்துகளில் இடமறிந்து செயல்படும் யுத்தியும் ஒன்றாகும். அதிகாரம் 50 இடனறிதல் பற்றி பேசுகிறது. ஒரு செயலுக்கு ஏற்ற இடத்தை அடையாளம் கண்டு, திட்டமிட வேண்டும். அலட்சியகாக எண்ணி இயங்கவும் கூடாது என்பதைத் "தொடங்கற்க எவ்வினையும்" (குறள் 491) என்ற குறள் விளக்குகிறது. வள்ளுவர் ஏன் இவ்வாறு சொல்கிறார் என்பதற்கான காரணத்தை "நெடும்புன்லுள் வெல்லும் முதலை" (குறள் 495) என்ற குறள்வழி விளக்குகிறார். முதலை தண்ணீரில் வலுவாக இருக்கும். அதனால் மற்ற உயிர்களை வெல்லும் ஆற்றல் கொண்டிருக்கும். ஆனால், அதே முதலை தரையில் பலமில்லாமல் மற்ற உயிரினங்களிடம் சிக்கிச் சாகும். எனவே வெற்றியின் பாதையில் செல்லத் திட்டமிடுபவர்கள் தகுந்த இடத்தைத் தேர்வு செய்ய வேண்டும்.

### கருவி

எந்தத் தொழிலாக இருந்தாலும் தொழிலுக்கு ஏற்ற கருவிகள் அவசியமாக கருதப்படுகின்றன. படைச் செருக்கு அதிகாரத்தின் குறள் 774 கைவேல் களிற்றொடு போக்கி. என்பதாகும். இக்குறள் வீரனொருவன் எரிந்த ஈட்டி யானையோடு போக, தன் நெஞ்சில் பாய்ந்த ஈட்டியை எடுத்துக்கொண்டு போருக்கு ஆயத்தமானன் என்பதாக அமைகிறது. நீராயுதபாணியாக எந்தத் தொழிலையும் நாம் செய்துவிட முடியாது. ஒரு போர் வீரனுக்கு எப்படி போர்க் கருவிகள் அவசியமோ அதேபோலதான் பல தொழில் செய்பவர்களுக்குத் தொழிலுக்கு ஏற்ற கருவிகள் அவசியம். அறுவடைக்குச் செல்லும் ஒரு விவசாயி வெறும் கையோடு சென்றால் அறுவடை செய்து பயனீட்ட முடியாது. அதேபோல கற்பிக்கும் தொழிலில் இருக்கும் ஆசிரியர் எந்த முன்னறிவும் இல்லாமல் பாடம் நடத்த நினைத்தால் அது மாணவர்களுக்கு அவர் செய்யும் பெரும் கேடாக முடியும்.

### வினை

திட்டமிடலில் மிக முக்கியமானது வினையாற்றுதல் ஆகும். ஒரு செயலைச் சரியாகத் திட்டமிட்டாலும் அந்தச் செயலை முறையாகச் செய்வதற்கான நபர்களைத் தேர்ந்தெடுப்பது தலைமைத்துவத்தின் அறிவார்ந்த குணமாகும். செயல்படுபவனின் திறமையை ஆராய்ந்து, செயலையும் ஆராய்ந்து காலத்தோடு பொருந்த செய்வானிடம் செயலைத் தர வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். குறள் 516 செய்வானேநாடி வினைநாடிக்காலத்தோடு எய்தஉணர்ந்து செயல் என்கிறது. அதோடு மட்டுமல்லாமல் இந்தச் செயலை இவனால்தான் முடிக்க முடியும் என்ற நம்பிக்கையும் ஒரு தலைமைத்துவத்திற்கு வர வேண்டும். இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவரன்கண் விடல் என்பது குறள் 517. அவ்வாறு செய்யாமல் நமக்கு விருப்பப்பட்டவர்களிடம் பொறுப்பைக் கொடுத்து விட்டு துன்பப்படுதல் கூடாது. இதையே தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும் (குறள் 510) என்கிறார் வள்ளுவர். ஒருவரை நன்றாக ஆராய்ந்தபின் நம்ப வேண்டும். ஆராய்ந்து நாம் தேர்ந்தெடுத்தவன் மீது ஐயம் கொண்டு அவன் செயல்பாடுகளில் தலையிட்டு, திட்டமிட்ட வேலை சிறப்பாக நடக்காமல் போவதற்குத் தலைமைத்துவமே சில சமயங்களில் காரணமாகி விடுவதையும் நாம் பார்த்திருக்கிறோம். பணியாளர் சில நேரங்களில் தவறுகள் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த நேரத்தில் அந்தப் பணியாளரை வன்மையாகச் சாடியும் அவர் குற்றங்களை மட்டுமே மிகைப்படுத்தியும் பேசுதல் கூடாது என்பதைக் "குணம்நாடி குற்றமும் நாடி; அவற்றுள் மிகைநாடி மிக்க கொள்ளல்" (குறள் 504) என்ற குறளில் கூறுகிறார் திருவள்ளுவர்.

ஒருவர் மீது நாம் வைத்திருக்கின்ற அலாதி அன்பை தொழிலில் கொண்டுவந்து சேர்ப்பது சிறந்த மேலாண்மைக்குச் சான்றாகாது என்பதை குறள் 507 காட்டுகிறது. அன்பின் காரணமாக அறிவில்லாத

ஒருவரைத் தேர்ந்தெடுத்தால் அது அறிவின்மையால் வரும் தொல்லைகளைத் தந்துவிடும் என்கிறார். யாரையும் ஆராயாது நம்பக் கூடாது. ஆராய்ந்து ஏற்றபின் அவன் முடிவு கட்டிய பொருளைத் தலைவனும் ஆராய வேண்டும் என்கிறார் 509ஆவது குறளில் திருவள்ளுவர்.

**தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்**
**தேறுக தேறும் பொருள்**

**கட்டமைத்தல்**

ஒரு வேலையைச் சரியாகக் கட்டமைக்கவும் மேலாண்மைத் திறன் அவசியமாகிறது. என்னென்ன செயல்களைச் செய்தால் ஒரு குறிக்கோளை அடைய முடியும், அந்தச் செயலை எப்படியெல்லாம் செய்ய வேண்டும், எப்பொழுது செய்ய வேண்டும் என்பனவற்றையெல்லாம் திட்டமிட்ட பிறகுதான் அந்தச் செயலை வரிசைப்படுத்த வேண்டும். வெற்றி பெற்ற ஒரு செயலை செய்வதற்கு அல்லது குறிக்கோளை அடைவதற்குப் பல்வேறு திட்டங்களைத் தீட்ட வேண்டி வரும். அவ்வாறு தீட்டப்படும் திட்டங்களை நேர்த்தியாக வரிசைப்படுத்தி, செயலாக்கத்திற்குக் கொண்டுவர வேண்டும். சில நேரங்களில் காலம் தாழ்த்தி செய்ய வேண்டிய வேலைகளைக் காலம் தாழ்த்திதான் செய்ய வேண்டும் என்றும் பகர்கிறார். (குறள் 672). சில செயல்களை ஒன்றன்பின் ஒன்றாகத்தான் செய்ய வேண்டும். அதே வேளையில் சில செயல்களை ஒருசேர செய்து முடிக்கவும் வேண்டி இருக்கும். எடுத்துக் காட்டாக, ஒரு சிறு வியாபாரத்தைத் தொடங்க நினைக்கும் ஒருவர் முதலில் தான் என்ன வியாபாரம் செய்யப் போகிறோம் என்பதை முடிவு செய்ய வேண்டும். அதன் பின்னர் அந்த வியாபாரத்திற்குத் தேவையான பொருட்கள் என்ன? அதைச் செயல்படுத்த வேண்டிய இடம் எது? தன்னுடைய வாடிக்கையாளர்கள் யார்? என்பதை முதற்கொண்டு திட்டமிட்டு கட்டமைக்க வேண்டும். அவ்வாறு கட்டமைத்துச் செயல்பட்டால் அந்த வியாபாரம் முதல் இழக்காமல் இருக்கும்.

**பணியமர்த்துதல்**

பணியமர்த்ததற்கு முக்கியமான ஒரு கருத்தை திருவள்ளுவர் முன் வைக்கின்றார். உற்றார், உறவினர் என்று சுற்றத்தார் இல்லாதவர்களை ஒரு பணியில் அமர்த்துதல் கூடாது. காரணம், அவர்கள் எந்த ஒட்டும் உறவும் இல்லாமல், ஏனோ தானோ என்று வேலையைச் செய்யக்கூடியவர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களைப் பணியில் அமர்த்தினால் தலைமைத்துவம் திண்டாடும் நிலை ஏற்படும். இப்படிப்பட்டவர்கள் எந்தப் பழி, பாவங்களுக்கும் அஞ்சுபவர்களாக இருக்க மாட்டார்கள் என்கிறது வள்ளுவன் அறிவு( குறள் 506)

அதே அறிவுதான் எத்தன்மையினரைப் பணியில் அமர்த்த வேண்டும் என்ற ஆலோசனையை மேலாண்மையில் உள்ளவர்களுக்குத் தருகிறது. அறநெறிகளைப் பின்பற்றுபவர், பொருள்மீது மிகுந்த நாட்டம் உள்ளவர், இன்பத்தில் திளைக்க ஆர்வம் உள்ளவர், உயிர் பயம் உடையவர்கள் ஆகியோரை ஆராயாமல் பணிக்கமர்த்துதல் கூடாது (குறள் 501). பணி அமர்த்துதல் என்பது மேலாண்மை துறையின் முக்கியமான பணிகள் ஒன்றாகும். பணிகளுக்குத் தேவையான தேர்ந்த ஆட்களைத் தேர்ந்தெடுப்பது மட்டும் அல்ல மேலாண்மையின் வேலை. அவர்களின் சுயவளர்ச்சி, பணிகளில் அவர்களின் செம்மை ஆகியவற்றையும் கண்காணிக்க வேண்டும். சரியான ஆட்களை சரியான பணியில் அமர்த்தினால் ஒரு நிறுவனம் வளர்ச்சி அடைவது திண்ணம்.

**நெறிபடுத்துதலும் கட்டுப்படுத்துதலும்**

திட்டமிட்ட ஒரு பணி சரியான தடத்தில் பயணிக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். ஒதுக்கப்படுகின்ற நிதி சரியான முறையில் பயன்படுகிறதா என்பதையும் கண்டு, வழி தவறி

இடறிப் போகும் நிலையில் அவற்றைச் சரி செய்து நேர் நிலைக்குக் கொண்டுவருவது இந்தக் கட்டுப்படுத்தலின் வேலையாகும். சரி வராத திட்டங்களை நிறுத்தி, மாற்றியமைத்து சரிப்படுத்து வதும் கட்டுப்படுத்தலின் பணியாகும். கட்டுப்பாடு இல்லாத மேலாண்மை பலன் தராது. ஒரு மன்னன் தன் குடிமக்களுக்கு எல்லாம் கிடைக்கிறதா என்பதை ஒற்றன் வழியாகத் தெரிந்து கொள்வது நடைமுறை. இது தலைமைத்துவத்தில் இருக்கும் தகையாளர்களுக்கும் பொருந்தும் (குறள் 582). திட்டமிட்டபடி வேலைகள் நடக்கின்றதா என்பதைத் தெரிந்துகொள்வது ஒரு மேலாளரின் பணியாகும். ஒற்றர்களை வைத்து அறிந்து கொள்ளும் அவசியம் கிடையாது. தன்னுடைய நுண்ணறிவாலும் கூர்ந்த கவனிப்பாலும் திட்டத்திற்கு ஏற்ற பணிகள் நடக்கின்றனவா என்பதை மேலாளர் அறிந்து கொள்ள முடியும்.

## முடிவுரை

திருக்குறள் பல மேலாண்மை கருத்துகளைத் தன்னகத்தே வைத்துள்ளது. ஆயிரம் ஆண்டுகள் பழைமையான திருக்குறளின் மேலாண்மை கருத்துகள் இன்றும் மானிட வாழ்வை மேம்படுத்தும் வகையில் உள்ளதால் பலரும் அதைப் பயன்படுத்துகின்றனர். வெற்றிகரமாக ஒரு தொழிலை வழிநடத்த பல செய்திகளை அடக்கி இருக்கிறது திருக்குறள். மன்னருக்குச் சொன்ன செய்தி என்று ஒதுக்கிவிடாமல், தலைமைத்துவத்திற்கான தகவல் என்று இந்த ஆய்வின் வழி அறியாலாம். இந்த ஆய்வு மேலாண்மை கருத்துகள் எந்தக் குறட்பாவில் சொல்லப்படுகிறது என்பதை ஓரளவு பகுத்துப் பார்த்துள்ளது. திருக்குறள் தமிழினத்தின் அறிவுப் பெட்டகம். மேலைநாட்டு அறிஞர்களின் கருத்துகளும் திருக்குறள் கருத்துகளோடு ஒத்திசைந்திருப்பதையும் அறிய முடிகிறது.

## மேற்கோள் நூல்கள்

1. திருக்குறள் - சாலமன் பாப்பையா உரை
2. திருக்குறள்- கலைஞர் உரை, கலைஞர் மு.கருணாநிதி, திருமகள் நிலையம், 2001
3. திருக்குறள் - மணக்குடவர் உரை,அகில இலங்கைக் கம்பன் கழக வெளியீடு.2012
4. திருக்குறள் - எளிய உரை, கம்பார் கனிமொழியார், மலேசியா, தமிழ்க்கனி வணிக நிலையம், 2023
5. பன்முக நோக்கில் திருக்குறள், பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 2016
6. திருக்குறள் - பரிமேலழகர் உரை,பழனியப்பா பிரதர்ஸ்,2007
7. திருக்குறள் தீபாலங்காரம்,கி.சு.கி. இலட்சுமி அம்மனி,சாரதா பதிப்பகம், 2006
8. Principles of Management & T. Ramasamy, Himalaya Publishing House, Mumbai, 2011
9. திருக்குறளில் உணர்வு மேலாண்மை, பா. நாகஜோதி, செப்டம்பர், 2016
10. திருக்குறளில் மேலாண்மை, பிரபாகரன் முனைவர், ஜூலை 2020
11. திருக்குறள் மிகமிக எளிய உரை, மு.பெரி, மு, இராமசாமி பேராசிரியர் டாக்டர், சிறி இந்து பப்லிகேஷன், 1995.